# மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், நாமக்கல் – 637 001

## தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்புக்கான ஊக்கத்தொகைப் பெறுவதற்கான 'சேந்தை சூப்பர் 25' முன்னோடித் திட்டம்

எட்டாம் வகுப்பு பயின்று கொண்டிருக்கும் மாணவ, மாணவியர்க்கு 4 ஆண்டுகளுக்கு ஊக்கத்தொகையாக மாதம் ரூ.1000/- பெறுவதற்கான தேசிய வருமானவரி ஊக்கத்தொகை ( National Means Cum Merit Scholarship - NMMS) தேர்வை ஒவ்வொரு வருடமும் அரசு நடத்தி வருகிறது. இந்த தேர்வில் ஏழாம் வகுப்பில் முதல் மற்றும் இரண்டாம் பருவப் பாடப் பகுதிகளிலும், எட்டாம் வகுப்பில் முதல் மற்றும் இரண்டாம் பருவப் பாடப் பகுதிகளிலும் அடங்கியுள்ள கணிதம், அறிவியல், சமூக அறிவியல் பாடங்களிலும் மற்றும் மன எண்கணித சோதனையை (Mental Arithmetic Test) சார்ந்த கேள்விகளும் கேட்கப்படுகின்றன.

இத்தேர்விற்கானத் தன்னார்வப் பயிற்சியினை சேந்தமங்கலம், அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் '**சேந்தை சூப்பர்** 25' என்ற பெயரில் முன்னோடித் திட்டத்தின் துவக்க விழாவானது பள்ளியின் தலைமையாசிரியர் சுமதி முன்னிலையிலும், நாமக்கல் மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் முனைவர் மு. செல்வம் அவர்களின் தலைமையிலும் 31.8.2024 அன்று மாலை 3 மணி அளவில் நடைப்பெற்றது.

இத்திட்டத்தில் 25 மாணவிகளுக்கு ஓய்வு நேரங்களிலும், வார விடுமுறை தினங்களிலும் இராசிபுரம் ஒன்றியம் பூசாரிப்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் ஆசிரியர் மணிகண்டன், நாமகிரிப்பேட்டை ஒன்றியம், சிங்கிலியன்கோம்பை, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி ஆசிரியர் இராம்குமார், கபிலர்மலை ஒன்றியம், பிள்ளைக்களத்தூர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் ஆசிரியர் நசிமா, சேந்தமங்கலம், அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியின் ஆசிரியர் காந்திமதி போன்ற தேசிய வருவாய்வழி மற்றும் திறன் ஊக்கத்தொகை தேர்வு வல்லுநர்களால் தொடர்ந்து தீவிரப் பயிற்சியும், தொடர் தேர்வுகளும் நடத்தப்படவிருக்கிறது. பயிற்சி அளிக்கப்படும் 25 மாணவிகள் அனைவரும் ஊக்கத்தொகைப் பெற வேண்டும் என்பதே இப்பயிற்சியின் நோக்கம் என நாமக்கல், மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் முனைவர் மு. செல்வம் கூறினார். இப்பயிற்சிக்கு ரூ 25000/- மதிப்பிலானப் பயிற்சி நூல்களை இராசிபுரம் ரோட்டரி மாவட்ட மகிழ்ச்சிப் பள்ளி தலைவர் கருணாகர பன்னீர்செல்வம், வெங்கடாசலபதி, சோமக்கண்ணன் போன்றோர் 25 மாணவிகளுக்கு வழங்கினார்கள்.

ரோட்டரி மாவட்டக் கல்விக்குழு தலைவர் வெங்கடேஸ்வர குப்தா, நாமக்கல் அபி எச் டிரேடர்ஸ் நிறுவனர் பன்னீர்செல்வம், தாட்சாயினி பன்னீர்செல்வம் போன்றோர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இப்பயிற்சியை ஒருங்கிணைத்தல், பயிற்சி கால அட்டவணை தயாரித்தல், தேர்வு கால அட்டவணைத் தயாரித்தல் போன்றவற்றை செயல்படுத்த நாமக்கல், மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன விரிவுரையாளர் பெ. தேவராசு ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுகிறார்.

தொடக்கவிழாவிற்கு சேந்தமங்கலம், அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியின் உதவித் தலைமையாசிரியர் வெங்கடாசலம் வரவேற்புரையையும், பட்டதாரி உதவித் தலைமையாசிரியர் மாதேஸ்வரன் நன்றியுரையையும் வழங்கினார்கள்.

******